
# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2008
ஐப்பசி 10
துல்ஹஜ்ஜா 12
புதன் (26-10-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 40
தொலைபேசி: 352
விலை சதம் 35


# 'இந்தியத் தமிழருக்கு நேரடிப் பாதுகாப்பு வழங்குங்கள்!'



## வெளியுறவு அமைச்சர் வாஜ்பாய்க்கு டாக்டர் சனர்த்தனம் இடித்துரை

### ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியா ஆதரிக்கவேண்டுமென வலியுறுத்து!

சிங்கள இனவெறியர்களினால் கொடுமைகளுக்குள்ளாகி நாள்தோறும் அச்சம், பீதி இவற்றின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழருக்கு இந்திய அரசு நேரடியான பாதுகாப்பை வழங்க முன்வரவேண்டுமென உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் தலைவர் டாக்டர் சனர்த்தனம் எம். ஏ. இந்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் வாஜ்பாய்க்கு எழுதியுள்ள கடிதமொன்றில் இடித்துரைத்திருக்கிறார். வங்க மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு இந்தியா கைகொடுத்து உதவியதுபோல ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தையும் இந்தியா ஆதரிக்கவேண்டுமென்றும் திரு. சனர்த்தனம் தமது கடிதத்தில் வாஜ்பாயிடம் கோரியுள்ளார்.

திரு. சனர்த்தனம் விடுத்துள்ள கடிதம் வருமாறு:-

உயர் திரு. வாஜ்பாய் அவர்கள்,
வெளி உறவு அமைச்சர்,
புதுடில்லி.

அன்புடையீர்,

வணக்கம். ஐ. நா. சபையில் இந்தி மொழியை அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் ஒன்ருக்கிட நீங்கள் எடுத்துள்ள முயற்சிகளை. உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவன் என்ற முறையில் என் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐ. நா. வில் தாங்கள் இந்தியில் பேசியுள்ளது, இந்தியாவின் பிரச்சனையை ஆங்கிலத்தில் பேசி அனைவரது கவனத்தையும் கவருவதை விடுத்து, தங்களுக்கு இந்திமொழி மீது உள்ள பற்றுதலையே காட்டியுள்ளீர்கள்.

நீங்கள் இந்தியாவின் வெளி உறவு அமைச்சராகப் பொறுப்பேற்றதை அறிந்து. உங்களால் வெளிநாட்டு இந்தியர் பிரச்சனைகள் தீரும் என்று நம்பியவர்களில் நானும் ஒருவன், குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை நீங்கள் ஏற்கனவே அறிந்து இருந்தீர்கள். காமன்வெல்த் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாடு இலங்கையில் நடந்தபோது நீங்களும் திரு. தில்லானும் திரு. மாரிசாமியும் சென்றிருந்தீர்கள். அப்போது தமிழர் பகுதிகளைக் காண விரும்பிய உங்களை வேண்டா வெறுப்புடன் இரவு நேரத்தில் ஊரே உறங்கிக் கொண்ருடிந்த நேரத்தில் ஹெலிக்கப்டரில் சுற்றிக் காட்டினர்— மாரிசாமி தமிழர் என்பதால் அவரை உங்களுடன் அழைத்துச் செல்ல சிங்கள அதிகாரிகள் விரும்பவில்லை சிங்கள அதிகாரிகள், தமிழர் நிலையை நீங்கள் அறியாதபடி தடைபடுத்தியது பற்றி நீங்களும் மாரிசாமியிடம் குறைபட்டுக் கொண்டீர்கள். அதனைத் தொடர்ந்து டெல்லியில் தங்களைச் சந்தித்து இலங்கைத் தமிழர் நிலை குறித்து நான் மனு ஒன்றை உங்களுக்கு அளித்தேன்,

தற்போது இலங்கையில் நடந்துள்ள இனக் கலவரத்தால் 500 தமிழர்கள் உயிர்கள் பலியாக 70 கோடி சொத்துக்கள் கொள்ளையடிக்கப் பட்டும் உள்ளனர். பாதுகாப்பற்ற நிலையின் காரணமாக 12 லட்சம் இந்தியத் தமிழர்கள் தற்போது இந்தியா திரும்பும் நிலையில் உள்ளனர். இந்த நேரத்தில் இலங்கையில் உள்ள இந்தியத் தூதர், இலங்கைக் குடியுரிமைபெற்ற இந்தியத் தமிழர்கள். இந்தியா திரும்ப அனுமதிக்கமாட்டேன் என்று மனிதாபிமானமற்ற முறையில் சொல்வதைக் காட்டிலும், இலங்கையிலுள்ள இந்தியத்தமிழருக்குப்

—4-ம் பக்கம் பார்க்க

# தெரிவுக் குழுவில் கூட்டணி அங்கம்வகிப்பதா இல்லையா?

## நடவடிக்கைக்குழு அடுத்த ஞாயிறு முடிவுசெய்யும்!


அரசியல் சட்டத்துக்கு கொண்டுவரப் படவேண்டிய திருத்தங்களைப்பற்றி ஆராய்வதற்கு அரசாங்கம் நியமிக்க உத்தேசித்துள்ள தெரிவுக் குழுவில் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்துக்காகப் போராடும் தமிழர் விடுதலைக்கூட்டணி அங்கம் வகிக்கலாமா? இதில் அங்கம் வகிப்பது கூட்டணியின் அடிப்படை இலட்சியத்துக்கும் தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் கூட்டணிக்கு தந்துள்ள ஆணைக்கும் முரண்பாடானதாக ஆகாதா? கூட்டணி இக் குழுவில் அங்கம் வகிப்பதால், தமிழினத்துக்கு ஏதாவது நன்மைஏற்படுமா? அல்லது பாதகம் ஏற்படுமா? இப்பிரச்சினைகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக்குழு 30-10-77ல் கொழும்பில் கூடி ஆராய்ந்து முடிவு எடுக்கவிருக்கிறது.

1972ம் ஆண்டு மே 22ம் நாள் தமிழ்மக்களின் இணக்கத்தைப் பெருமல் சிங்கள மக்களின் பிரதிநிதிகளால் ஏதேச்சாதிகார முறையில் ஒரு தலைப்பட்சமாக நிறைவேற்றப்பட்ட இன்றைய அரசியல் சட்டத்தை தமிழர் விடுதலைக்கூட்டணி நிராகரித்துவிட்டது. 1975ம் ஆண்டு பெப்ரவரி 6ம் திகதி இப்பிரச்சினை மீது நடைபெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தலிலும் தந்தைசெல்வாவை பெருவாரியான வாக்குகளினால் தெரிவு செய்து தாம் அரசியல் சட்டத்தை முற்ருகநிராகரித்துவிட்டதை உலகத்துக்கு உணர்த்திவிட்டனர். தமிழ்மக்கள்.

புதிய அரசியல் சட்டத்தை நிராகரித்ததுமட்டுமன்றி 1976ம் ஆண்டு மே 14ம் திகதி வட்டுக்கோட்டையில்நடைபெற்ற மாநில மாநாட்டில், இலங்கை ஒரு தீவு— ஆனால் இரண்டு வேவ்வேறு நாடுகள்; சிங்கள ஸ்ரீலங்கா வேறு நாடு— தமிழ் ஈழம் வேறு நாடு; தமிழ் ஈழத்தின் அரசுரிமையை சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் மீட்டேதீருவோம்—என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய இனம் ஒரு தனியான தேசிய இனம் என்றும், அந்த உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திர சோசலிச தமிழ் ஈழ அரசை நிறுவுவதற்கு தமக்கு

— 4-ம்பக்கம் பார்க்க




கண்டி அம்பிட்டிய குருமடத்தில் தங்கியிருந்த அகதிகளுடைய புகைப்படங்கள் இவை. இக் குருமடத்தில் 1300க்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் இருந்தார்கள். இவர்கள் மீக்கனுவ, கலேவல, யாழத்துன்ன, அம்பிட்டியா போன்ற இடங்களிலிருந்து வந்தவர்கள். 3 வாரங்களுக்கு மேலாக இங்கு பராமரிக்கப்பட்டு வந்தனர். இந்த தமிழ் மக்களுடைய அநேக வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டும், தீவைக்கப்பட்டும் உள்ளன, சிங்கள இனவெறியர்களால் இவர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எனக்கு ஏன் இவ்வளவு அக்கறை?

## யாழ்ப்பாணத்து அன்பர் ஒருவருக்கு சாலை இளந்திரையன் விளக்கம்



**டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து எழுதப்பட்ட கடிதம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பதில் வருமாறு:-**

*"வெறிகள் கும்மாளம் போடுகிற ஒரு சூழ்நிலையில் தமிழ்ச் சகோதரி திருமதி செல்வதி முத்துக்கிருஷ்ண நிதானமாகக் கருத்துத் தெரிவிக்கத் தவறிவிட்டாரே" என்று வாட்டம் தெரிவித்தேன்; அதே சமயம் சிங்களச் சகோதரி திருமதி எவ்லின் நிதானமாகச் சிந்தித்துள்ளதைப் பாராட்டினேன். 25 9.77 சுதந்திரனில் நான் எழுதிய இந்தக் கடிதம் பற்றிய உங்கள் அதிருப்தியை வெளியிட்டு நீங்கள் எழுதிய 25-9-77 கடிதம் கிடைத்தது. உங்கள் கருத்து மாறுபாட்டை உள்ளத்திலேயே வைத்துப் புழுங்காமல் அல்லது அக்கம்பக்கத்தாரிடம் புரளி பேசிக்கொண்டு இராமல் நேரே எனக்கே எழுதிவிட்ட உங்கள் நேர்மையைப் பாராட்டுகிறேன்; இத்தகைய அப்பட்டமான மனிதர் (தமிழர்)களையே நான் விரும்புகிறேன்.*

நிற்க. "இங்கு எம் தமிழினத் தலைமை தாங்கி 30 ஆண்டுகள் வழிநடத்திய எஸ். ஜே. வி, கும்பல், எமதும் இலங்கையினதும் பிரச்சினைகளை எவ்வழியிலும் தீர்வுகான அனுமதிக்கவில்லை" என்று குற்றம் சாட்டியுள்ளீர்கள்: இதற்கு ஆதாரமாக, 1968 முதல் 1977 வரை பலபேர் சொல்லியுள்ள கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளீர்கள்; சுந்தரலிங்கம், சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினம் மற்றும் இளைஞர் பேரவையினர், தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையினர், ஜனநாயக சோசலிஷ்ட் கட்சித் தலைவர் முதலானோர் அவ்வப்போது த. வி. கூட்டணியினர் (அல்லது தமிழரசுக் கட்சியினர்) மீது வீசிய கண்டனங்களை வரிசைப் படுத்திக் காட்டியுள்ளீர்கள்.

அதாவது, த. வி. கூட்டணியினருக்கும் எனக்கும் ஏதோ நெருங்கிய உறவு இருப்பது போலவும், அவர்களின் பேச்சுக்களையும் "சுதந்திரன்" இதழையும் கொண்டே நான் இலங்கை அரசியலைப் புரிந்து கொண்டிருப்பது போலவும் நினைத்திருக்கிறீர்கள். உண்மை இதற்கு நேர்மாறானது; நீங்கள் பட்டியல் போட்டுக் காட்டியுள்ள குற்றச்சாட்டுகளை நானும் அறிந்தவனே;

அதற்கு மேலும்,— அங்குள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் மார்க்சியக் கருத்துடைய நண்பர்களும் த. வி. கூ. மீது அள்ளி வீசி வந்துள்ள குற்றச்சாட்டுகளையும் நான் அறிறேன். அது மட்டுமல்ல; கிழக்கத்திய நாடுகளின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் மார்க்சியமே நிரந்தரமான தீர்வு காண முடியும் என்பதிலும் நான் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

ஈழநாட்டுத் தமிழர் பிரச்சினையைச் சிறுபான்மையினர் பிரச்சினையாகவே நான் அணுகுகிறேன். ஒரு தமிழன் என்ற முறையில, தமிழர்களாகிய உங்களுக்கு ஏற்படும் இன்னல் எனக்கு அதிகமான வேதனையை ஏற்படுத்துவது இயல்பே; இதை மறைப்பதில் பயனில்லை. ஆனால், நீங்கள் சில ஆயிரம் தமிழர்கள் சேர்ந்துகொண்டு நாலைந்து சிங்களவர்களைத் தாக்கினால் நான் உங்களுக்கு வாழ்த்துப் பாட மாட்டேன்; இப்போது சிங்கள வெறியைக் கண்டிக்கும் அளவுக்கு அப்போது "தமிழ் வெறி"யைக் கண்டிப்பேன்!

அப்பால் — உங்கள் கருத்துக்கு அரணாக,— பல சமயங்களில், பல பேர் தமிழரசாருக்கு எதிராகப் பேசியவற்றைக் காட்டியுள்ளீர்கள். நீங்கள் எடுத்துக்காட்டியுள்ள இவர்களின் எல்லாக் கருத்துக்களையும் நீங்கள் முழுமையாக ஆதரிக்கிறீர்களா என்பது எனக்குத் தெரியாது; இவர்களில் பலரும், பலவேறு காலக் கட்டங்களில் தமிழரசாரோடும் த. வி. கூட்டணியோடும் இணைந்து நின்றவர்களே என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அப்படிப்பட்டவர்கள் எப்போதோ, ஏதோ காரணத்தால் சொன்ன சில வாக்கியங்களை மட்டுமே கோவைப்படுத்தி, "பாரீர், த. வி. கூட்டணியின் இழிவை" என்று சொல்லுவது சரியில்லை. "பசித்தவன் தின்னாததும் இல்லை, பகைத்தவன் சொல்லாததும் இல்லை" என்பது பழமொழி.

மேலும்,—தமிழருக்குப் பிரச்சினைகளே இல்லை என்பதுபோலப் பல காலங்களில் செயல்பட்ட என் அருமை மார்க்சிய நண்பர்கள் (அவர்களின் அனைத்துப் பிரிவினரும்), பிறகு பிறகு தமிழருக்குப் பெரிய பிரச்சினைகள் உள்ளன என்று அறிக்கை விட்டதைநீங்களும் அறிந்தே இருப்பார்கள். பிரச்சினைகள் உள்ளன என்பதை ஒப்புக் கொண்ட அந்தப் பல்வேறு கட்சிகளின் நண்பர்கள் அவைகளுக்குத் தீர்வு காண்பதற்கு என்ன வழியைக் காட்டினார்கள், எந்த அளவு வெற்றிபெற்றது என்பதை நீங்கள் தெரிவித்தால் மகிழ்வேன். மகளின் உணர்ச்சிகளை எளிதிலே கிளறக்கூடிய மொழி உரிமை, படிப்புரிமை போன்ற பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணவிட்டால், அவை புரையோடி வேறு தீங்குகளுக்கு வழி திறந்துவிடும் என்பதை என் மார்க்சிய நண்பர்கள் கூடச் சிந்திக்காமல் போனது என்ன?

மார்க்சியத்தின்மீது கட்சி அமைத்திருப்பவர்கள் இலங்கையின் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாகிய இதிலே போதிய அக்கறை காட்டவில்லை; பௌத்தத்தின்மறைவிலே தமிழர்க்கு எதிரான சிங்கள வெறியைக் கிளப்ப அங்கே அமைப்புகள் உள்ளன; இன்று தமிழர் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துவிடப்போவதாக மார்தட்டுகிற திரு. ஜே. ஆர்., தமிழர் உரிமைகளுக்குப் பாதுகாப்பாக அரசு (தமிழ்த் தலைவர்களுடன்) செய்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வேண்டும் என்ற கோரிக்கையின்மீது 1957ல் கண்டிக்கும் பாதயாத்திரை நடத்தியவர் என்பதை நீங்களும் அறிவீர்கள்.

இந்தச் சூழ்நிலையில், ஒரு பெரிய இனவெறிப் பிரச்சினையாக உருக்கொண்டு நிற்கும் சிறுபான்மையர் உரிமைப் பாதுகாப்புப் பிரச்சினைக்குத் தமிழர்கள் யாரை நம்புவார்கள்? "நாங்களும் சரியான வழிகாட்டமாட்டோம், வழிகாட்டவருவோருடனும் ஒத்துழைக்கமாட்டோம்" என்றால் எப்படி? பிரச்சினையைத் தங்கள் நோக்கில் த. வி. கூட்டணியினரைத் திட்டிக்கொண்டு இருப்பது மட்டுமே ஒரு கொள்கை ஆகிவிடுமா? தெளிவானதும், மக்களின் ஆதரவைப் பெறக்கூடியதுமான மாற்றுவழியைக் காட்டவேண்டாமா? மார்க்சிய இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் (வாக்குச் சீட்டுப் பிச்சை கேட்டது வேடிக்கையே என்றாலும், தேசிய அரசுப் பேரவைக்கான தேர்தலில் அவர்கள் பெற்றுள்ள முழுத்தோல்வி, அவர்களின் தவறான போக்கைக் காட்டவில்லையா? எந்தவகையிலும் அவர்கள் அங்கே மக்களின் நம்பிக்கையைப் பெறவே இல்லை என்பதைக் காட்டவில்லையா?

இந்தப் பின்னணியிலே தான் இலங்கைச் சிறுபான்மையினரான தமிழர்களின் பிரச்சினையைப் பார்க்கிறேன். பிரச்சினையை அறிவுத்தளத்திலிருந்து நழுவி உணர்ச்சித் தளத்திலே விழும்படி விட்டுவிட்டு, — தும்பை விட்டு வாலைப்பிடிப்பது போல வம்புக்குப் போட்டி போடக் கூடாது; அது மார்க்சியவாதிகளின் மீது மக்களுக்கு உள்ள மதிப்பையே கெடுத்துப் போடும்! இந்தக் கருத்திலேதான், காங்கேசன் துறைத் தொகுதியில் செல்வா அவர்களை எதிர்த்து நண்பர் பொன்னம்பலம் போட்டியிட்டது கண்டு வாட்டமடைந்தேன். இப்போதும் அதை அடக்கி வைக்க அரசாங்கம் இருக்கின்ற போது, பெரும்பான்மையினத்தினர் கச்சை கட்டிக் கொண்டு கொலை விளையாட்டிலே ஈடுபட்ட பெரிய தவற்றைக் கண்டிக்க வேண்டிய சூழ்நிலையில். தமிழ்த் தலைவர்கள் எப்போதோ பேசிய பேச்சுக்களே கலவரத்துக்குக் காரணம் என்று திருமதி. முத்துக்கிருஷ்ண சொன்னது தவறு அல்லவா? இது 'ஓநாயும்ஆட்டுக்குட்டிடிம்' கதைபோல இல்லையா? அதனாலேயே மிகவும் வாட்டம் அடைந்தேன்.

உங்கள் நாட்டு அரசியலை நான் முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், — ஒரு மனிதாபிமானி என்ற முறையில், —உங்கள் நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் வெறி நிகழ்ச்சி எனக்கு மிகுந்த வேதனையைத் தந்துள்ளது. வெளியே உள்ள எங்களுக்கு அப்படியான வேதனைகள் ஏற்படாதபடி அங்கே நல்ல அமைதி நிலவ வேண்டும் என்பதே என் பெரிய விருப்பம்.

---

# கொககிளாய் வாழ் தமிழ் மக்களின் வருங்காலம் என்ன?

கடந்த ஆவணிமாதம் நடைபெற்ற இனக்கலவரம் திமிர்பிடித்த சிங்கள இனவெறியர்களால் ஆரம்பிக்கப்பட்டு நாடெங்கும் பரவிய போது; "கொக்கிளாய்" என்ற கிராமமும் அக்கொடியவர்களின் பார்வையில் இருந்து தப்பமுடியவில்லை. கொக்கிளாய் மக்கள் செய்த தவறு என்ன? இருநூறு மைல்களுக்கப்பால் இருந்து வந்து மீன்பிடித் தொழில் செய்யும் நோக்கோடு குடியேறியது சிங்கள இனம். அவர்களுக்கு ஆதரவு நல்கி வந்தாரைவாழவைக்கும் மக்கள் வன்னிமக்கள் என்பதை செயலில் காட்டினார்கள். இவையெல்லாவற்றையும் மறந்து நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் வேளை 'பதவியா' இராணுவவீரர்களின் உதவியுடன் 21-8-77 பகல் 12 மணியளவில், தங்கள் வெறியாட்டத்தைக் காட்டத் தொடங்கினார்கள். வீடுகளுக்கு தீ வைத்தார்கள் கொள்ளையடித்தார்கள். அப்பாவித் தமிழ் மக்களை அடித்துக் கொடுமைப் படுத்தினார்கள் சிங்களவரும், இராணுவத்தினரும். இது கண்டு மக்கள் கிலி கொண்டு ஓடி காடுகளில் தஞ்சம் புகுந்தார்கள்.

நாட்டில் அமைதி நிலவுகிறதென்ற அறிவிப்பைத் தொடர்ந்து, காட்டில் தஞ்சம் புகுந்த தமிழ் பெண்கள் தங்கள் கணவன்மாரை அனுப்பி காணிகளுக்குள் 'கொட்டில்கள்'' அமைத்தார்கள். அதையும் விட்டுவைத்தார்களா அந்த அரக்கர்கள். அதையும் தீயிட்டுக் கொழுத்திவிட்டார்கள் இது பற்றி நீதிமன்றம் சென்றார். நீதி கிடைக்கவில்லை. ஆனல் சிங்கள மக்களைப் பாதுகாக்க வேண்டும்என்ற நோக்கோடு ஒருவரின் சொந்தக் காணிக்குள் இராணுவமுகாம் ஒன்றை அமைத்துக்கொடுத்திருக்கிறது சிங்கள அரசு. இதற்கு நீதியில்லையா? நீதி தேவனும் செத்துவிட்டானா? தமிழ் மகனே நீதியமைச்சராய் இருக்கும் போது, தமிழ் மக்கள் மீது கருணை செய்யவில்லை.

இவ்வளவு அநியாயமான, கொடுமையான, நெஞ்சம் உறைகின்றசெயல்களையெல்லாம் செய்து முடித்த பின்னர். சிதைவுற்ற நிலையில் இருந்த இரண்டு மீன் பிடிவாடிகளுக்கு நெருப்பு வைத்துவிட்டு எங்கள் வாடிகளுக்கு நெருப்பு வைத்துவிட்டான் தமிழன்" என்று முல்லைத்தீவுப் பொலீசில் புகார் செய்துள்ளார்கள். இதனால் முல்லைத்தீவு பொலீசார் கொக்கிளாய் தமிழ் வாலிபர் சிலரைத் தேடி வலைவிரித்துள்ளார்கள் தங்கள் வீடு வாசல்கள் பொருள்பண்டம் எல்லாம் இழந்து காடுகளில் நிர்க்கதியான நிலையிலும் கூட, தலைமறைவாகவும் வாலிபர் சிலர்வாழவேண்டியசூழலும் உருவாகியுள்ளது. இதற்கு நீதியில்லையா? தமிழனின் தலைவிதி என்ன? பண்டாரவன்னியனின் பாசறை 'கயவர்கள்' கைக்கு மாறுவதா? காலம் பதில் சொல்லுமா?

—கொக்கிளாயான்

---

## பனம் விதைகள் வேண்டுமா?

மில்க்வைற் தொழிலதிபர் இம்முறையும் அதிகளவு பனம் விதைகளைக் குடியேற்றப் பகுதிகளில் நாட்டில் பனைவளம் பெருக்கத் திட்டமிட்டுள்ளார். எனவே பனம் விதைகள் தேவையாக மன்றங்கள், நலனோம்பும் சங்கங்கள் பாடசாலைகள் எம்மிடம் பதிவுசெய்து பனம்விதைகளைப்பெற்றுக் கொள்ளவும். தொடர்புகொள்ள வேண்டியமுகவரிமில்க்வைற் 522/2 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்மொழித்திட்டம் - இனிப்புத் தடவிய கொடிய விஷம்!

இவ்வாண்டில் ஏற்பட்ட இனக்கலவரத்துக்குப் பின், இந்நாட்டில் தேசிய ஒற்றுமைபற்றி அளவுக்கதிகமாகப் பேசப்படுகிறது. அதை ஏற்படுத்துவதற்காக மும்மொழித் திட்டத்தைச் செயற்படுத்தப்போவதாகப் பிரதமரே கூறியிருக்கிறார்.

ஒரு பாடத்திட்டத்தைத் தயாரிப்பதோ, மூன்றாவது மொழியொன்றைக் காட்டாய மொழியாகப் பாடத்திட்டத்தில் புகுத்தலாம் என்று தீர்மானிப்பதோ அரசியல்வாதிகள் செய்யக்கூடியதல்ல. மூன்று மொழிகளையும் பாடசாலைப் பருவத்திலுள்ள பிள்ளைகளால் கற்கமுடியுமா?; கற்கமுடியுமானால் எந்தத் தரத்தில் மூன்றாவது மொழியைக் கற்பிக்கலாம்?; என்பனபோன்ற வினாக்களுக்கு விடையளிக்க வேண்டியவர்கள் உளவியலாளரும் கல்வியியலாளருமே. இவ்வினாக்களுக்கு விடையளிக்கக் கூடிய தகுதியுள்ள எவரும் இதுவரை தமது கருத்தைத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. எதிர்கால பரம்பரையைப் பாதிக்கக்கூடிய, கல்வியோடு தொடர்புடைய விடயங்களில் மாற்றங்களைச் செய்யும்போது நிபுணர்களின் ஆலோசனையும் கல்வியோடு தொடர்புடையவர்களின் ஆலோசனையும் நிச்சயமாகப் பெறப்படவேண்டும்..

கல்வித்திட்டம் அரசியல்வாதிகளின் கையில் அகப்பட்டமையால் இன்று தமது எதிர்காலக் கல்வி எப்படி அமையப்போகிறது என்பதை அறியாமல் அல்லலுறும் மாணவர்களைப் பார்க்கிறோம். மும்மொழித் திட்டத்தைப் பற்றிய தனது கருத்தை வெளியிட்ட பிரதமர் நிபுணத்துவ யோசனையைப் பெற்றாரா இல்லையா என்பது இதுவரை தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் மும்மொழித்திட்டத்தால் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தலாம் எனப் பிரதமரும் வேறு சிலரும் கருதுகிறார்கள் என்பது மாத்திரம் தெளிவாகத் தெரிகின்றது.

மும்மொழிப் போதனையால் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தலாம் என எண்ணுவதற்கு இரண்டேயிரண்டு நோக்கங்கள் மாத்திரம் இருக்கமுடியும்.

1. இரு இனத்தவர்களும் ஒருவரோடொருவர் இலகுவாகக் கருத்துப்பரிமாறலை ஏற்படுத்த முடியும்.

2 ஒரு இனத்தின் மொழிக்கும் பண்பாட்டுக்கும் மற்றைய இனம் மதிப்புக் கொடுக்கும்போது இரு இனத்தவர்களும் தாம் சமத்துவமுள்ள, ஒருவரையொருவர் விளங்கிக்கொள்ளுகின்ற, ஒருவரோடொருவர் நேச மனப்பான்மையுள்ள மக்களாகத் தம்மைக் கருதுவர்.

இந்நிலையில் மும்மொழிப் போதனையால் இந்த இரு நோக்கங்களையும் நிறைவேற்றமுடியுமா என்பதற்கு நாம் விடைகாணவேண்டும். முதலில் முதலாவது நோக்கத்தை ஆராய்வோம். இலங்கையிலுள்ள சிங்கள மொழியைப் போதனாமொழியாகக் கொண்ட பாடசாலைகளிலும். தமிழ் மொழியைப் போதனாமொழியாகக் கொண்ட பாடசாலைகளிலும் ஆங்கிலமொழி பல்லாண்டுகளாக இரண்டாவது மொழியாகப் போதிக்கப்பட்டு வருகிறது. இன்று உலகப் பொது மொழியாய்,— உலக நாடுகள் ஒன்றோடொன்று தொடர்புகொள்ளும் மொழியாய்— இருக்கின்ற ஆங்கில மொழி ஏன் இரு இனங்களுக்கிடையேயும் கருத்துப் பரிமாறலை ஏற்படுத்தும் மொழியாக அமைய முடியாது! ஆங்கிலத்தால் இரு இன மக்களிடையேயும் கருத்துப் பரிமாறலை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பும் வசதியும் இருக்கும்போது, கருத்துப் பரிமாறல் நோக்கத்துக்காக மூன்றாவது மொழியைப் பாடசாலைகளிற் கற்பிக்க வேண்டிய தேவையில்லை.

**ஆ. நடராசா**
மட்டுவில் வடக்கு

இன்னொரு கோணத்தில் நோக்கினால் எமது பாடசாலைகளில் பல்லாண்டுகளாக ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்பித்து, ஆங்கில மொழிமூலம் கருத்துப் பரிமாறலைச் செய்யக்கூடிய எத்தனைவீதத்தினரை எமது பாடசாலைகள் உருவாக்கியிருக்கின்றன? இதற்குக்கிடைக்கக்கூடிய விடை நிச்சயமாக இரண்டாவது மொழிப் போதனையையிட்டு எம்மைத் திருப்திப் படுத்தாது. இந்நிலையில். மாணவருக்கு மூன்றாவது மொழியையும் அறிமுகப்படுத்தி, அதன் மூலம் கருத்துப் பரிமாறலைச் செய்யக் கூடிய எத்தனை பேரை எம்மால் உருவாக்க முடியும்! இதற்குக் கிடைக்கக் கூடிய விடையும் மும்மொழித் திட்டத்திற்குச் சாதகமாக அமையாது என்பது உறுதி.

இனி இரண்டாவது நோக்கத்தை எடுத்துக் கொள்ளுவோம். இலங்கையில் இன்று ஒரு இனத்தின் மொழி ஆட்சி மொழியாக இருக்கிறது. ஒரு இனத்தின் மதம் அரசாங்க மதமாக மதிக்கப்படுகிறது. மற்றைய இனத்தின் மொழிக்கோ மதத்திற்கோ உரிமை எதுவும் வழங்கப்படவில்லை. சிங்கள அரசாங்க ஊழியர் தமிழ் மொழியைக் கற்காமலே சம்பள உயர்வும் பதவியுயர்வும் பெறுகின்றபோது, தமிழ் அரசாங்க ஊழியர் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறாமைக்காக சம்பள உயர்வும் பதவியுயர்வும் மறுக்கப்படுவதுடன் வேலை நீக்கமுஞ் செய்யப்படுகிறார்கள். சிங்கள இனத்தைச் சேர்ந்த ஆட்சிமன்ற உறுப்பினர்களால், தமது மக்கள் தமக்குக் கொடுத்த அதிகாரத்தைக் கொண்டு அரசியலமைப்பை மாற்றியமைக்கவும்.அரசியலமைப்பில்திருத்தங்களைச் செய்யவும் முடிகிறது. தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்களால் தமது மக்கள் தமக்குக் கொடுத்த அதிகாரத்தைக் கொண்டு எதையுமே செய்யமுடியாத நிலை நிலவுகிறது.

இப்படியான தமிழினத்தைப் பாதிக்கக் கூடிய முக்கிய சம்பவங்களில் தமிழினத்தை மதிக்காத சிங்கள இனம், தமிழ் மொழிக்கு மதிப்புக் கொடுத்து தனது பாடசாலையில் தமிழை மூன்றாவதுமொழியாகக் கற்பிக்க முன்வருகிறதென்றால் அதற்குக்காரணம் இதுவரை ஒன்றன்பின் ஒன்றாக மாறி மாறி ஆட்சிபீடமேறிய சிங்களக் கட்சிகள் தாம் கடைப்பிடித்த இனவாதக் கொள்கைகாரணமாக தமிழ் பாடசாலைகளில்புகுத்த முடியாதிருந்த சிங்கள மொழிப் போதனையை தமிழ் பாடசாலைகளில் புகுத்தி விடலாம் என்றநம்பிக்கை தவிர வேறில்லை. எனவே சிங்கள இனவெறியர்களின் இனிப்பு வார்த்தைகளை நம்பி எமது பாடசாலைகளில் சிங்கள மொழி புகுத்தப்படுவதை அனுமதிக்கும் அளவுக்கு ஏமாறக் கூடியவர்களல்ல தமிழ் பேசும் மக்கள்.

உண்மையிலேயே பிரதமருக்கு தேசிய ஒருமைப்பாட்டில் அக்கறையிருந்தால் சிங்கள மக்கள் தமிழ் மக்களை மதிப்பதை எடுத்துக் காட்டுமளவுக்குச் சிங்கள மக்களிடத்தும், மும்மொழிப் போதனையை ஏற்பதாகக் கூறுகின்றபௌத்த குருமாரிடத்தும் மனமாற்றம் ஏற்பட்டிருந்தால், அரசியலமைப்பின் மூலம் சிங்கள மக்களுக்கு எவ்வித உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ,அவ்விதமாற்ற முடியாத உரிமைகளைத் தமிழ்மக்களுக்கும் வழங்க வேண்டும். அதைச் செய்தால் உண்மையான தேசிய ஒருமைப்பாடு ஏற்படக் கூடும். அதைச் செய்யாமல் இனிப்பு வார்த்தைகளால் தமிழ்மக்களை ஏமாற்றி தமிழினத்தின் அழிவின் மேல் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது.

# தமிழ் ஈழத்தை மீட்டிட இளந் தலைமுறையே எழுந்துவா!

## தமிழக திமுக பேச்சாளர் செல்வி தன்மானம் அழைப்பு

தமிழகமும் ஈழமும் ஒரே நாடாக இருந்ததாக நிலநூல் ஆராய்ச்சியாளர்கள் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறார்கள். லெமூரியா கண்டம் என்ற பெயரோடு அல்லது குமரிக் கண்டம்என்றபெயர்பெற்று விளங்கியதாகவும் கூறுவர். ஈழத்துத் தமிழ் மக்கள் இங்கிருந்து சென்று குடியேறியவர்கள்,வந்தேறிகள்,கள்ளத் தோணிகள், ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னால அங்கு சென்றவர்கள் என்று சிலர் கூறிவரும் கருத்து தவறு, தமிழர்களேதான் ஈழத்தின் பூர்வீக குடிகள் இலங்கை மண்ணுக்குச்சொந்தக்காரர்கள்! இலங்கை, தமிழன் உயிர்ப்பித்த மண்.

'தென் திசையைப் பார்க்கிறேன். என் சிந்தையெல்லாம் பூரிக்குதடா; அன்றந்த இலங்கையரணை ஆண்ட மறத்தமிழன். ஐயிரண்டு திசைமுகத்துப் தன் புகழை வைத்தோன்; குன்றெடுத்த நெடுந்தோளன்; கொடை கொடுக்கும் கையான்; குள்ள நரிச் செயல் செய்யும் கூட்டத்தினர் கூற்றம் இராவணம் காண்; அவன் இருக்கின்ற திசை நோக்கித் தொழுகின்றேன்' என்று பாவேந்தர் பாரதிதாசனார் புகழ்ந்து பாடியதற்கு ஒப்ப பண்டாரவன்னியன், சங்கிலியன் முதலான முடி மன்னர்கள் அரசோச்சிய தென்னிலங்கையின் வந்தேறிய குடிகள் கள்ளத்தோணிகள் வங்காளிகள்.

வளமான ஈழத்தின் பங்காளிகளாக வந்து குடியேறிய வங்காளிகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகிவிட்டதால் சிறுபான்மையாகி விட்ட தமிழன் போன திசை நாடுகளையும் பார்த்துக் கொண்டு நாதியற்று நிற்கிறான். 1948 இல் ஈழத்துக்குச் சுதந்திரம் வழங்கிய வெள்ளையன் ஆட்சியை சிங்களவன் கையில் ஒப்படைத்துச் சென்று விட்டான். சனநாயக ஆட்சி என்னும் மரணப் படுகுழியின் தமிழன் வீழ்த்தப்பட்டு வேதனைப்படுகிறான். 1948 முதல் இன்று வரை சிங்கள வெறியர்களால், அவ்வப்பொழுது தமிழர்கள் தாக்கப்படும் கொடுமைதொடர்ந்து நடைபெறுவதால். தமிழர்கள் அறிவிற் சிறந்த ஈழத்துத் தமிழர்கள்—சட்டங்களை ஆராய்ந்து, உலகச் சரித்திரங்களைப் புரட்டிப் பார்த்து பல நாட்டிலும் உயர்கல்வி கற்று சிறந்து திகழ்ந்த ஈழத்தின் தந்தையெனப்பெயர்பெற்றசெல்வநாயகம், திருச்செல்வம், நாவலர் அமிர்தலிங்கம் மகளிர் குலதிலகம் திருமதி மங்கையர்கரசியார் இவர்களெல்லாம் கூடிப்பேசி ஒரு முடிவிற்கு வந்து ஈழத்துத் தமிழினத்தின்விடுதலைக்காக இடைவிடாது போராடி வந்தனர்—வருகின்றார்கள்.

ஈழத்தமிழகத்தின் விடுதலைப் போர் வீரர் தலைவராகத் திகழ்கின்ற திரு. அமிர்தலிங்கம் அவர்கள் என்ன நினைக்கின்றார்களோ அதனையே அங்குள்ள 35 லட்சம் தமிழர்களும் தமிழ் மறத்திகளும் எண்ணிச் செயல்படும் காட்சியை ஈழத்தில் காண முடிகிறது. இந்த நாட்டிலுள்ள [illegible] இன ஆண்களுக்கு இல்லாத வீரவுணர்வுகளுக்கு சொந்தக்காரிகளாக ஈழத்திலே இருக்கின்ற தாய்க்குலம் திகழ்கிறது.

ஈழத்திலே விடுதலைப் போர் நடக்கின்றது என்ற உண்மை வரலாறு தமிழர்களுக்கு ஏன் தி.மு.க.விலே மற்ற கட்சிகளிலே இருக்கின்ற இலட்சோப இலட்சம் தொண்டர்களுக்குத் தெரியாது. அந்த அளவிற்கு ஈழத்தமிழ்நாடு விடுதலைப் பிரச்சினை ஒரு சாதாரணப் பிரச்சினையாகக் கருதப்பட்டு புறக்கணிக்கப்பட்டு விட்டது. திராவிட முன்னேற்றக்கழகத்தில் 9 ஆண்டு காலமாகப் பேச்சாளராக பணியாற்றிவருகின்றநானே கடந்த 5 ஆண்டுகாலமாகத் தான் ஈழத்தமிழர்களின் உண்மை நிலையைப் புரிந்து கொண்டுள்ளேன். என்னுடைய உறவினர்கள் பலர் ஈழத்தில் வாழ்வதால்.

ஈழத்தமிழர்கள் தமிழகத்து மக்களைப் பார்த்து 41/2 கோடி தமிழர்களே! நாங்கள் உலகின் பல பகுதிகளில் வாழும் 71/2 கோடி தமிழர்களுக்கென ஒரு நாட்டினை உருவாக்க போராடி வருகிறோம். நீங்கள் எங்களுக்காக குரல் கொடுங்கள். வீரமுரசு கொட்டுங்கள். வேங்கையாக மாறுங்கள். தமிழன் என்று சொல்லிக் கொண்டால் ஈழத்தில் தமிழனுக்கு வாழ்வில்லை. ஆண்ட இனம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. மீண்டிட இங்கே நாங்கள் இரத்தம் சிந்துகிறோம். உயிரிழந்து, உடைமையிழந்து உறவிழந்து, குடும்பம் இழந்து, வீடிழந்து; வாசல் இழந்து வாழ்விழந்து வாழ்ந்து வருகிறோம் பல்லாண்டு காலமாக வாழ்வா? சாவா? விடுதலைநாடா? சுடுகாடா? விடுதலை பெற்றிட்டால் வாழ்வு; இல்லை என்றால் சாவு. ஏன்? தமிழன் என்று சொல்லிக் கொண்டால் ஈழத்தில் தமிழனுக்கு வாழ்வில்லை. விடுதலை பெறப் போராடுவோம். விடுதலைக் கிடைக்கும்வரை போராடுவோம். கடைசித் தமிழன் உள்ளவரை, அவன் இறுதி மூச்சு சுதந்திரக் கனல்கக்கும்வரை போராடுவோம். விடுதலை கிடைத்தால் வாழ்வோம் கிடைக்காவிட்டால் மாள்வோம். வீணர்களாக விசை ஒடிந்த தேகத்திற்குச் சொந்தக்காரர்களாக, சோற்றுத் துருத்திகளாக, உல்லாச புரியினராக, பதவி

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# தமிழின ஒருமைப்பாட்டை எப்படியும் கட்டிக்காப்போம்



## கூட்டணியில் தொண்டமான் நிலைகுறித்து செயலதிபர் நாவலர் விளக்க அறிக்கை

இ. தொ. காவுக்கும், தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் உள்ள தொடர்பு பற்றியும், தமிழர் விடுதலைக் கூட்டணியில் திரு. தொண்டமானின் நிலை பற்றியும் பல தவருன செய்திகள் சென்ற சில வாரங்களாக பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றையொட்டி உண்மை நிலையை விளக்கும் பொருட்டு இவ்வறிக்கை வெளியிடப்படுகின்றது:

1972ஆம் ஆண்டு தமிழர் கூட்டணி அமைக்கப்பட்ட பொழுது, இ. தொ. காவும் அதில் ஒரு அங்கமாகச் சேர்ந்ததன் மூலம் தமிழினத்தின் சரித்திரத்தில் முன்னெப்பொழுதும் இல்லாத ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தியது. இந்த ஒற்றுமையைச் சிதறவிடாது கட்டிக் காக்கும் நோக்கத்துடனேயே தமிழர் கூட்டணியில் இணைந்த எல்லா அரசியல் இயக்கங்களும் நடந்து வருகின்றன.

1976ஆம் ஆண்டு தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றப்பட்டு அதன் இலட்சியம் சுதந்திரத் தமிழ் ஈழம் அமைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டபொழுது இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும், கூட்டணியின் அங்கமான ஏனைய கட்சிகளுக்குமிடையில் கருத்து வேற்றுமை எழுந்தது. இனத்தின் ஒற்றுமைகருதி, தமிழ் ஈழ இலட்சியத்தை இ. தொ. கா. ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் கவனத்திற்கெடுத்து அதேநேரத்தில் கூட்டணியின் ஒற்றுமை குலையாது. திரு. தொண்டமானையும் கூட்டணித் தலைவர்களில் ஒருவராகக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநில மகாநாடு தெரிவுசெய்தது. இதிலிருந்து தமிழ் ஈழம் பற்றிய கருத்து வேற்றுமையால் இ. தோ. காவிற்கும், தமிழர்விடுதலைக் கூட்டணிக்குமுள்ள உறவில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை என்பது தெளிவாகின்றது. இக்காரணத்தினுலேயே தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களும் தமிழ் ஈழத்திற்கு வெளியே இ. தொ. காவின் தனியான தேர்தல் விஞ்ஞாபனத்தோடு இ. தொ. கா. வேட்பாளர்களும் போட்டியிட்டனர்.

தமிழ் ஈழத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரக் கோரிக்கையை இ. தொ. காவும் மலையகத்தில் வாழும் தமிழ்த் தொழிலாளர்களின் பிரத்தியேகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இ. தொ. காவின் திட்டங்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஆதரித்து தேர்தலில் ஒன்றுபட்டு உழைத்தன. அதே அடிப்படையில்தான் தேர்தலின் பின்பும் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றக் குழுவும், இ. தொ. கா. நாடாளுமன்ற உறுப்பினரான திரு. தொண்டமானும் சேர்ந்து இயங்கி வருகின்றனர்.

தனித்தனிக் கொள்கையோடு ஒன்றுக்கொன்று ஆதரவாக இயங்கி வரும் இயக்கங்களின் நடைமுறையில் வித்தியாசம் ஏற்படுவது வியப்புக்குரியதல்ல. மலைநாட்டுத் தமிழ் மக்களின் விசேஷ நிலையின் காரணமாக இ.தொ.கா. எடுக்கும் முடிவுகளின்படி நாடாளுமன்றத்தில் திரு. தொண்டமான் இயங்க வேண்டியவர் ஆகின்ருர். இதனுல் தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்றக் குழுவின் சில நடவடிக்கைகளோடு அவர் சேர்த்து நடக்க முடியாத நிலை ஏற்படக் கூடும். அப்படியான ஒரு நிலைதான் சென்ற 4ஆம் திகதி அரசியலமைப்புத் திருத்த விவாதத்தில் எழுந்தது. ஆனுல் தமிழர் விடுதலைக் கூட்டணி நிலைக்கு விரோதமாக அவரோ அல்லது இ. தொ. காவின்நிலைக்கு விரோதமாக நாமோ எதுவும் கூற வேண்டிய நிலை ஏற்படவில்லை.

இவற்றிலிருந்து திரு. தொண்டமான் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதென்ற பேச்சுக்கு இடமில்லை. இதனுல் இ. தொ. காவிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் உள்ள உறவில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. வட்டுக்கோட்டை மாநில மாநாட்டின் போது இருந்த நிலையே தொடர்ந்தும் இருந்து வரும். அம்மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட பிரகாரமே திரு. தொண்டமான் தொடர்ந்தும் தலைவராக இருந்து வருவார். திரு. தொண்டமானைத் தலைவராகதெரிவு செய்தது ஒரு தனி மனிதனுக அல்ல. இ. தொ. கா என்ற மாபெரும் ஸ்தாபனத்தின் தலைவர் என்ற முறையிலேயே! வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கே கூட்டணி அமைக்கப்பட்டது. தமிழினத்திற்கு இன்னல் சூழ்ந்த நேரத்தில் எமது மக்கள் சிந்திய கண்ணீர் காயுமுன்பே எம் மத்தியில் பிளவுகளை உருவாக்க முயற்சிக்கும் சக்திகளுக்கு இடமளிக்காது கருத்து வேற்றுமைகளை அங்கீகரித்து. அதே நேரத்தில் இன ஒற்றுமையை கட்டிக்காத்துச் செல்வதே கூட்டணியின் கருத்தாகும், எமது நிலையில் தர்க்க ரீதியாக தவறியதாக சிலர் கருதலாம். ஆனுல் தமிழினத்தின் ஒற்றுமை இவை எல்லாவற்றிற்கும் மேற்பட்டதென்பதைதமிழ் மக்கள் உணர்ந்திருக்கின்றனர்.

இனத்தைக் கூறுபோட்டு அழிக்கும் சக்திகளுக்கு எவ்விதத்திலும் இடமளிக்காது நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு த. வி. கூட்டணியின் செயலதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு விட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தெரிவுக் குழு...

—1-ம் பக்கத் தொடர்

கட்டளை தருமாறும் தமிழர் விடுதலைக்கூட்டணி 1977 பொதுத் தேர்தலில் தமிழ் மக்களை கோரியது; தமிழ்மக்கள் இந்தக்கட்டளையை கூட்டணிக்கு வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் தமிழ் மக்களால் முற்ருக நிராகரிக்கப்பட்ட ஒரு அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றி ஆராய்வதற்கு அரசாங்கம் நியமிக்கும் தெரிவுக்குழுவில் கூட்டணி அங்கம் வகிப்பதா இல்லையா என்பதே தீர்க்கப்படவேண்டிய கேள்வியாக உள்ளது.

தெரிவுக்குழுவில் கூட்டணி அங்கம்வகிப்பது தமிழ் ம்க்களால் நிராகரிக்கப்பட்டுவிட்ட இன்றைய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வதுபோல ஆகிவிடுமென்று சிலர் கருதுகின்றனர். அத்துடன் இலங்கை ஒரே நாடு—என்ற கொள்கையை கூட்டணி ஏற்பது போல அது ஆகிவிடுமென்பது இவர்களது வாதமாகும்.

1972ம் ஆண்டின் அரசியலமைப்பு— சிங்களவர்களால் சிங்களவர்களுக்காக —சிங்கள ஸ்ரீலங்காவுக்காக உருவாக்கப்பட்டது; அது எவ்விதத்திலும், தமிழ் ஈழத்தைக்கட்டுப்படுத்த முடியாது; தமிழ் மக்களின் இறைமை தமிழ் மக்களிடமே இருக்கிறது; அந்த இறைமையைப் பயன்படுத்தி தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை மீட்கவேண்டும். இந்த நிலையில் தெரிவுக்குழுவில் கூட்டணி அங்கம் வகிப்பது, தமிழினத்தின் மாசுபடுத்தப்படாத இந்த இறைமைக்கு ஊறுதேடிவிடும் என்று இவர்கள் கூறுகிருர்கள்.

இலங்கை இரண்டு நாடுகளைக்கொண்ட ஒரு தீவு என்ற கொள்கையுள்ள கூட்டணி தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கக்கூடாது என்று இவர்கள் ஆட்சேபிக்கிருர்கள்.

அதேவேளையில் தெரிவுக்குழுவில் அங்கம்வகித்து—அங்கும் சென்று, இலங்கைத் தீவு இரண்டுநாடுகள் என்பதையும், இரண்டு தேசிய இனங்களுக்கும் இரண்டு வெவ்வேறு அரசியலமைப்புக்கள் இங்கு வேண்டுமென்பதையும், 1977 பொதுத் தேர்தலில் தமிழ் ஈழம் அமைப்பதற்கு தமிழ்மக்கள் தந்த கட்டளையையும் எடுத்துக்கூறி இலங்கையின் இன்றைய ஒரே அரசியலமைப்பை இரண்டு அரசியலமைப்புக்களாக மாற்றுவதற்கு கூட்டணியினர் பிரேரணை கொண்டுவரலாம் என்று வேறு சிலர் கருதுகின்றனர்;

இன்னும் ஒரு சாரர் கூட்டணியில் அங்கம் வகித்தும் அதன் தலைவராக இருந்தாலும் தனிநாட்டுக் கொள்கையிலிருந்து விதிவிலக்கு பெற்றிருக்கும் தலைவர் திரு. எஸ். தொண்டமான் பா.உ. அவர்களை தெரிவுக்குழுவில் இடம் பெறச் செய்து, அவர் மூலம் தமிழ் இனத்தின் மொழி' இன,நில உரிமைகள் பற்றிய தருத்தங்களை தெரிவுக் குழுவில் சமர்ப்பிக்கலாமென்றும், இப்படிச் செய்வது, கூட்டணியின் கொள்கைக்கு விரோதமில்லாமலும், அதே சமயம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் ஏதாவது நன்மை விளையுமானுல் அதை இழக்காமல் தவிர்க்கவும் முடியுமென்றும் யோசனை கூறுகின்றனர்.

அரசாங்கத்திலுள்ளவர்களுக்கு தமிழினத்துக்குள்ள குறைபாடுகள் என்ன? தமிழ் மக்களின் கோரிக்கைகள் என்ன என்பது நன்கு தெரியும்; கூட்டணி தெரிவுக்குழுவிற்குச் சென்று இப்போது புதிதாக அதை எடுத்துக் கூற வேண்டியதில்லை; அரசுக்கு மனமிருந்தால் தமிழ் மக்களின் உரிமைகளை அரசியலமைப்பில் உள்ளடக்கும் திருத்தங்களை தாமாகவே கொண்டு வரட்டும் ஆகவே தெரிவுக் குழுவில் கூட்டணி அங்கம்வகிக்க வேண்டிய அவசியமில்லையென்று இன்னெரு சாரர் கூறுகின்றனர்.

30-10-77ல் கூட்டணியின் நடவடிக்கைக்குழு இதற்கு [illegible]

## தமிழ் ஈழத்...

—3-ம்பக்கத் தொடர்

மேல் மட்டற்ற பாசம் கொண்டவர்களாக, நாற்காலி நாயகர்களாக, அந்நிய ஏகாதிபத்தியத்திற்குக் கப்பம் கட்டி, கைகட்டி, வளைந்து வணங்கி, வெண் சாமரம் வீசி வாழ்வதைவிட சுதந்திரப் போராட்டத்தில் தலை நிமிர்ந்து, முதுகு நிமிர்ந்து, நெஞ்சம் நிமிர்ந்து வீரர்களாக நடைபயின்று வன்மை பெற்ற தேகமும் வலிமையான உடற்கட்டும் வீரம் முறுக்கேறிய நரம்புகளும் பெற்று, எம்மை அடிமைப்படுத்த நினைக்கும் அற்பர்களின் தலைகளை உருட்டித் தள்ளி, கடும்பயணம் நடத்த வேண்டுமென்ருல் கடும்பயணம் நடத்துவோம்.

காடுகளில் வாழ வேண்டுமென்ருல் காடுகளில் வாழ்வோம் கனிகிழங்கைத் தின்ன வேண்டுமென்ருல் கனிகிழங்கைத் தின்று, மிருகங்களை வேட்டையாடி சுட்டுத் தின்ன வேண்டுமென்ருல் மிருகங்களைச் சுட்டுத் தின்று, மாசேதுங்கும் அவன் மனைவியும் பட்டதுபோல், ஆடையின்றி காடுகளில் அலையும் நிலை ஏற்பட்டாலும், இலைதழைகளைப் உரித்துக் கட்டி அலைந்து, மலை குலைந்தாலும் நிலைகுலையாது, நெஞ்சத் துணிவும் தன்முனைப்பும் மேற்கொண்டு அச்சம் அகற்றி இச்சகம் பேசுவோரை இகழ்ந்து கொடுமைகளை வரவேற்று பகைமைகளைச் சாடுவோம். என்ற உள்ள உறுதியோடு போராடுகிருன் தமிழன்.

நான் இங்குள்ள தமிழ் இளைஞர்களை அழைக்கின்றேன். ஈழத்து விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்து இளைய தலைமுறை இனியாவது ஈடுபட்டு அயராது உழைத்திட வேண்டுமென்று ஈழத்திலும் உலகின் பல பாகங்களிலும் வாழுகின்ற தமிழர் தலைவர்கள் அழைக்கின்ருர்கள். தமிழனுக்குத் தமிழன், இரத்தத்தின் இரத்தம்.உடன் பிறப்பு-உயிர் துடிப்பு என்ற முறையில் சிங்க ஏறுகளென நாம் புறப்படுவோம். தமிழ்த் தாய்மார்களே நீங்களும் திரண்டெழுந்து வீரவரலாறு படைக்கவாருங்கள்.நாமெல்லாம்கூட நல்லதோர் முடிவெடுப்போம்,

முடியாது என்பது அகிலத்தில் இல்லை என்ருன் நெப்போலியன் போராடிப் போராடி அந்நியர் ஆட்சியைவேரோடு சாய்த்திட்ட வீரத்தலைவர்களின் வறலாற்றைப் படித்தவர்கள் நாம். எப்பகைக்கும் அஞ்சாது தமிழ் அன்னையின் நாட்டை மீட்க நாமெல்வாம் ஒன்றுதிரண்டு வீரர்கள் பாசறை ஒன்றினை அமைத்திடவேண்டும். அந்தப் பாசறையில் சேர்ந்து பயிற்சி பெற்று பணியாற்றிட வெறும் அரசியல் பேசிநேரத்தை வீணுக்கிடாமல், காலம் பொன் போன்றது காத்திருக்கும் கடமையோ கண்போன்றது எனக்கொண்டு, ஈழத்தமிழர் வீர விளையாட்டில் எங்களுக்கும் பங்குண்டென காட்டிட பகைமுகம் அஞ்சிட அணிவகுத்து வாரீர் வாரீர்!

## இந்தியத் தமி—

1-ம் பக்கத் தொடர்

பாதுகாப்பு அளிக்க முயலுவது சிறப்பாகும் இவ்வேளை 12 லட்சம் இந்தியத் தமிழர்களை இந்தியா திரும்பச் செய்வதா? உரிமைக்குப் போராட வைப்பதா எனமுடிவு செய்யத் தன்கட்சிக் கூட்டத்தைக் கூட்டி இருக்கும் அவர்கள் தலைவர் திரு. தொண்டமானை இந்திய அரசு அழைத்துப் பேசி முடிவு காணுவது நல்லது.

இலங்கைப் பிரதமரோ தமிழர் பிரச்சனைகளைத் தீர்ப்பதை விடுத்து மும்மொழித் திட்டம் என்ற போர்வையில் சிங்கள மொழியைத் திணிக்கும் முயற்சியில் உள்ளார்.

இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தில் இந்தியா பயணம் செய்ய 'விசா' பெற லஞ்சம் அளிக்க வேண்டிய நிலையைத் தடுத்து, இந்தியாவின் மானத்தைக் காக்க வேண்டுகிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைதீர ஒரே வழி இலங்கைத் தமிழருக்குத் தனிநாடு தான் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 'பங்களாதேஷ்' பிரச்சினையை உலக அரங்கில் பிரச்சாரம் செய்த ஜெயப்பிரகாசர் வழியில்செயல்படும் தங்கள் அரசு, இலங்கைத் தமிழர் சுயநிர்ணய உரிமை கோரிக்கையை ஆதரித்து இலங்கைத் தமிழர் இன்னலைத் தீர்க்க வேண்டுகிறேன்,

இங்ஙனம் இரா. சனுர்த்தனம்.
தலைவர், உலகத்தமிழ் இளைஞர் பேரவை

துரித சலவைக்கு கூடுதல் நீலம் கலந்து தயாரிக்கப்பட்ட
"மில்க்வைற் சலவைப் பவுடர்"
வாங்கி உபயோகியுங்கள்
கூடுதல் பயன் பெற சிறிது நேரம் துணிகளை ஊறவிடுங்கள்:
ஓர் மில்வைற் தயாரிப்பு

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org